திருமதி மல்லிகா சின்னசாமி: அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 3, திரு. கோவை தங்கம், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

3—

இளைஞர்களுக்கு வாய்ப்பு

*** 31589—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாக்காளர் சேர்த்தல், புதுப்பித்தல் போன்ற பணிகளுக்கு ஏற்கெனவே பணிபுரிந்து வரும் ஆசிரியர், ஆசிரியைகளுக்குப் பதிலாக வேலை இல்லாத இளைஞர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வாக்காளர் சேர்ப்பது, புதுப்பித்தல் போன்ற பணிகளுக்கு ஏற்கெனவே பணிபுரிந்து வரும் ஆசிரியர், ஆசிரியைகளுக்குப் பதிலாக வேலை இல்லாத இளைஞர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க 1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவுகள் 13-பி மற்றும் 29-ன்படி விதிகளில் இடமில்லை.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாக்காளர் சேர்ப்பது, புதுப்பித்தல் போன்ற பணிகளுக்கு ஆசிரியர், ஆசிரியைகளை இந்தப் பணியில் ஈடுபடச் செய்வதால் அவர்கள் தங்களுடைய குடும்பப் பணிகளை முடித்துவிட்டு பள்ளிக்குச் சென்று குழந்தைகளுக்குக் கல்வி கற்பித்து மீண்டும் வீட்டுக்கு வந்து தொடர்ந்து இந்தப் பணியைச் செய்வதற்கு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தமிழ்நாட்டில் கடந்த 20, 25 ஆண்டு

2003 நவம்பர் 3]

காலமாக வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துவிட்டு வேலை இல்லாமல் இருக்கின்ற இளைஞர்களை அல்லது பதிவு செய்யாமல் இருக்கின்ற இளைஞர்களைக்கூட இதில் பயன்படுத்திக்கொள்ளலாம். ஆகவே, இந்தப் பணியில் படித்துவிட்டு வேலை இல்லாத இளைஞர்களைப் பயன்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு முதலில் பதில் அளிக்கும்போது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். Representation of People Act-ன்படி இதற்கு சட்டத்தில் இடம் இல்லை என்பதைத் தெரிவித்தார். (குறுக்கிடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தங்கம் என்ன? சட்டத்தில் இடம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) சரி சொல்லுங்கள்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு நான் அரசிடம் எதிர்பார்க்கின்ற பதில்; வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கின்ற வகையில் படித்துவிட்டு வேலையில்லாத இளைஞர்களுக்கு வாய்ப்பினைக் கொடுக்கின்ற வகையில் நம்முடைய தமிழக அரசு மத்திய அரசிடம் வலியுறுத்தி இந்தப் பணியைச் செய்ய முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே சட்டத்தின் நிலையினை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். மைய அரசுக்கு இது குறித்து, மாண்புமிகு உறுப்பினர் கூறிய ஆலோசனையின் அடிப்படையில் அரசும் ஆய்ந்து எழுதும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 4, திரு. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

முற்பகல் 10-30

4—

டைடல் பார்க்

***5259—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் அமைந்துள்ளதைப் போல கோயம்புத்தூரில் தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்த "டைடல் பார்க்" போன்ற மையம் அமைக்க அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். கோயம்புத்தூரில் தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்த டைடல் பார்க் அமைப்பது குறித்து அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்கள் இருக்கும் திசையை நோக்கி வணங்குகின்றேன். இந்தியக் கூட்டமைப்பு இந்த ஆண்டு வெளியிட்ட ஒரு ஆய்வு அறிக்கையிலே தொழில் துவங்கி நடத்துவதற்கு மிகவும் ஏற்ற நகரங்கள் என்று இந்தியா முழுவதற்குமாக முதல் பத்து நகரங்களை வரிசைப்படுத்தியுள்ளது. இதில், கோவை நான்காம் இடத்தைப் பெற்றுள்ளது. கோவையில் தரம் வாய்ந்த பொறியியல் கல்லூரியிலிருந்து ஆண்டுதோறும் 5,500 பொறியியல் பட்டதாரிகள் வருகிறார்கள். இவர்களில் 50 சதவிகிதம் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பொறியியல்